செய்தி வெளியீடு எண்:708 நாள்: 24.11.2012

# சட்டமன்ற வைரவிழா புகைப்படக் கண்காட்சி ஐஸ்லேண்ட் பாராளுமன்றக் குழுவினர், முதலமைச்சர் அவர்களை இரும்புப் பெண்மணி என புகழாரம்

ஐஸ்லேண்ட் பாராளுமன்ற குழு தலைவர் மேதகு அஸ்தா ஆர். ஜோக்கன்னஸ்பார்க் அவர்கள் தலைமையில், நான்கு பேரைக் கொண்ட குழுவினர் சென்னை வந்துள்ளனர். அக்குழுவினர் இன்று மாண்புமிகு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் திரு. ப. தனபால் அவர்களுடன் கலந்துரையாடினர். பின்னர், சட்டமன்றப் பேரவை வளாகத்தில், சட்டமன்ற வைரவிழாவினையொட்டி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ள புகைப்படக் கண்காட்சியைக் கண்டு களித்தனர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களுக்காக அளித்துவரும் நலத் திட்ட உதவிகள் குறித்த புகைப்படங்களைக் கண்ணுற்ற குழுவின் தலைவர் மேதகு அஸ்தா ஆர். ஜோக்கன்னஸ்பார்க் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், மக்களின் நலன் காக்கும் "இரும்பு பெண்மணி" எனப் புகழாரம் சூட்டினர்.

வெளியீடு:
இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9